**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI.**

Original Suit : **OS** . 559/2019 Plaintiff : PW.3

Deposition of Witness of Defendant: DW

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. கலைமணி | District | : | |
| Father/ Husband name | : | திரு. முத்தையா | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2573 of the day of 18.11.2025

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் நீதிமன்றத்தில் இருந்து மாவட்ட கல்வி அலுவலர் சிவகங்கை அவர்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பெயரில் மேற்படி மாவட்ட கல்வி அலுவலர் எனக்கு அளித்த அனுமதி கடிதத்தின் மூலமாக தாவா வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன், நான் மேற்படி மாவட்ட கல்வி அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன். மேற்படி அழைப்பாணையில் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் மேல்நிலைப்பள்ளி மற்றும் தொடக்கப்பள்ளி ஆகியவற்றின் அங்கீகார உத்தரவுகளின் அசல் மற்றும் சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்திட அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டு இருந்தது. அது சம்பந்தமாக எங்களது அலுவலகத்தில் இருந்து ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். மேற்படி பள்ளியின் 2002 முதல் 2012 வரையிலான காலத்திற்குரிய அங்கீகார உத்தரவின் கணினி மூலம் நகல் எடுக்கப்பட்ட சான்று நகலை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணங்களுக்குரிய அசலானது தற்போது எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. எனக்கு அளிக்கப்பட்ட அனுமதி கடிதம் **சா.சா.ஆ.3** ஆகும். சாம்பவிகா மழலையர் பள்ளிக்கு LKG முதல் 5ம் வகுப்பிற்கான அங்கீகார உத்தரவானது 01.06.2002 முதல் 31.05.2005 வரை, தொடக்க

கல்வி இயக்குனர், சென்னையும், 01.06.2005 முதல் 31.05.2008 வரை, 01.06.2008 முதல் 31.05.2011 வரை, 01.06.2011 முதல் 31.05.2014 வரை சிவகங்கை மாவட்ட தொடக்க கல்வி அலுவலரும் வழங்கிய உத்தரவின் சான்று நகல் **சா.சா.ஆ.4** ஆகும். சாம்பவிகா மேல்நிலைப்பள்ளிக்கு 6 முதல் 10ம் வகுப்பிற்கான அங்கீகார உத்தரவானது 27.07.2001 முதல் 26.07.2004 வரை, பள்ளிக்கல்வி இயக்குனர், சென்னையும், 27.07.2004 முதல் 26.07.2007 வரை, 27.07.2007 முதல் 26.07.2010 வரை, 27.07.2010 முதல் 27.06.2013 வரை சிவகங்கை மாவட்ட முதன்மை கல்வி அலுவலரும் வழங்கிய உத்தரவின் சான்று நகல் **சா.சா.ஆ.5** ஆகும். சாம்பவிகா மேல்நிலைப்பள்ளிக்கு 11 முதல் 12ம் வகுப்பிற்கான 19.12.2002ம் தேதியில் மேற்படி வகுப்புகள் துவங்கியதற்கான அங்கீகார உத்தரவினை சென்னையில் உள்ள இணை இயக்குனர் மேல்நிலை கல்வி வழங்கியதும் 20.12.2002 முதல் 31.05.2005 வரை 01.06.2005 முதல் 31.05.2008 வரை 01.06.2008 முதல் 31.05.2011 வரை 01.06.2011 முதல் 31.05.2014 வரை சென்னையில் உள்ள இணை இயக்குனர் மேல்நிலை கல்வி வழங்கிய அங்கீகார உத்தரவின் சான்று நகல் **சா.சா.ஆ.6** ஆகும். சா.சாஆ.4 முதல் சா.சா.ஆ.6 வரை அங்கீகாரம் கோரி யார் மனு கொடுத்தது என்றால் அது குறித்த எந்த விவரமும் இல்லை. சா.சா.ஆ.4 ஆவணத்தில் மேற்படி அங்கீகாரம் கோரி மனுவானது சாம்பவிகா மழலையர் தொடக்கப்பள்ளியின் தாளாளர்/நிர்வாகி என விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.5 ஆவணத்தில் மேற்படி அங்கீகாரம் கோரி மனுவானது சாம்பவிகா மேல்நிலை பள்ளியின் தாளாளர்/செயலர் என விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.6 ஆவணத்தில் மேற்படி அங்கீகாரம் கோரி மனுவானது சாம்பவிகா மேல்நிலைபள்ளியின் தாளாளர்/செயலர் என விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**1ம் முதல் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:

நான் மேற்படி பதவியில் எந்த தேதியிலிருந்து பணிபுரிந்து வருகிறேன் என்றால் 17.10.2022ம் தேதியிலிருந்து தான் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கண்காணிப்பாளர் என்ற கோதாவில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான், சா.சாஆ.4 முதல் சா.சா.ஆ,6 வரையிலான ஆவணங்களின் அசல் ஆவணங்கள் எங்களது அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணங்களின் அசலை யாரிடம் இருந்து பெற முடியும் என்றால் கேட்டு தான் சொல்ல முடியும். மேற்படி ஆவணங்களின் சான்று நகல்கள் எவ்வாறு எங்களுக்கு கிடைத்தது என்றால்

நீதிமன்றத்தால் கேட்கப்பட்ட காரணத்தினால் கணினியிலிருந்து தரவு இறக்கம் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி அங்கீகாரம் பெறுவதற்காக கொடுக்கப்பட்ட மனு விண்ணப்பமானது அந்த ஆவணங்கள் சம்பந்தப்பட்ட கோப்பில் தான் இருக்கும் என்றால் சரிதான். அங்கீகாரம் பெறுவதற்கு யார் விண்ணப்பம் கொடுத்தது அது குறித்து யாரால் ஆய்வு செய்யப்பட்டது ஆய்வின் அறிக்கை என்ன போன்ற விவரங்கள் கணினியில் இருக்கும் என்றால் இருக்காது, அங்கீகாரத்திற்கான உத்தரவு மட்டுமே இருக்கும். சா.சா.ஆ.6-ல் திரு.ஆர்.எம், காசி High Secondary 2000 – 2008 Nursery 2008 -2011 திரு.ஏ,எம். சேகர் High Secondary 2008 – 2014 Nursery 2011 -2014 என பென்சிலால் குறிப்பிட்டுள்ள விவரம் யாரால் எழுதப்பட்டது எதை பார்த்து எழுதப்பட்டது என்றால் மேற்படி விவரத்தை நான் தான் எழுதினேன். மேற்படி விவரத்தை சாம்பவிகா பள்ளியில் பணிபுரியும் AHM ஆன PT ஆசிரியரிடம் கேட்டு எழுதினேன். மேற்படி AHM ஆன PT ஆசிரியரின் பெயர் கணேசனா என்றால் அவருடைய பெயர் தெரியாது. சா.சா,ஆ,4 முதல் 6 வரையிலான ஆவணங்களில் எந்த இடத்திலும் காசி என்றோ சேகர் என்றோ பெயர் குறிப்பிடவில்லை என்றும், தாளாளர்/செயலர் என்று தான் விவரம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சாம்பவிகா பள்ளி கல்வி குழுவின் செயலாளர் யார் என்றால் தற்போது சேகர் என்பவர் உள்ளார் என தெரிவிக்கிறேன். மேற்படி சேகர் என்பவருக்கு சாம்பவிகா பள்ளி குழுவின் செயலாளர் என இருந்திட எங்கள் அலுவலகத்தால் ஒப்புதல் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தனியார் பள்ளிகளின் சட்டம் விதி 24-ன் படி பள்ளி கல்வி குழுக்களுக்கு எங்கள் அலுவலகத்தால் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றால் தனியார் பள்ளி முகாமை குழுக்களுக்கு எங்கள் அலுவலகம் அனுமதி வழங்குவது இல்லை. மேற்படி அனுமதியானது அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு மட்டுமே வழங்கப்படும். 23.08.2015ல் நடைபெற்ற சாம்பவிகா பள்ளி முகவாண்மை கூட்டத்தில் சாம்பவிகா மேல்நிலை பள்ளிக்கு ராம.காசியும் சாம்பவிகா மழலையர் தொடக்கப்பள்ளிக்கு எஸ், மலர்வேனி ஆகிய இருவரையும் செயலாளராக தேர்வு செய்யப்ட்டு சிவகங்கை மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் சிவகங்கை மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் ஆகிய இருவருக்கும் பதவு தபால் மூலமாக 26.08.2015ம் தேதி கருத்துரு அனுப்பப்பட்டது என்றால் எங்களுடைய தனியார் பள்ளிகளுக்கான மாவட்ட கல்வி அலுவலகம் 01.10.2022ம் தேதியன்று தான் ஆரம்பிக்கப்பட்டது. அதனால் மேற்படி கருத்துரு எங்கள்

அலுவலகத்திற்கு வரவில்லை. சா.சா.ஆ,4 முதல் 6 வரையிலான ஆவணங்கள் வாதிகளுக்கு ஆதரவாக தாக்கல் செய்தும் மற்ற ஆவணங்களை தாக்கல் செய்திட மறைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல,. சா.சா.,ஆ 4 முதல் 6 வரையிலான ஆவணங்களின் முழு கோப்புகளையும் கொண்டு வந்தால் மட்டுமே மேற்படி ஆவணங்களின் உண்மை தன்மையை அறிந்து கொள்ள முடியும் என்றால் எங்களிடம் இருந்த ஆவணங்களை கொண்டு வந்துள்ளோம் எதையும் மறைக்கவில்லை. சாம்பவிகா மேல்நிலை பள்ளியானது 10, 12ம் வகுப்புகளுக்கான பொது தேர்வு நடைபெறக் கூடிய மையம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.11.18 16:59:24 +0530